# DEPOSITION OF WITNESS
## (Chapter XXII Code of Criminal Procedure)
## IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.
## அமர்வு வழக்கு எண். 301/2017

**அ. சா– 10**

| | |
|---|---|
| பெயர்: டாக்டர். திரு.கோகுலரமணன் | கிராமம் : |
| த/பெ : திரு. | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 24th day of November–2022.

**முதல் விசாரணை**:–

நான் தற்போது சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் துறைத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.08.2016 ம்தேதி நான் மேற்படி மருத்துவமனையில் பணியில் இருந்தபொழுது ஏற்காடு காவல் நிலைய ஆய்வாளரின் வேண்டுகோள் கடிதத்தின்பேரில், இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட சுமார் 45 வயது மதிக்கத்தக்க குப்புசாமி என்பவரின் ஆண்பிரேதத்தை த.கா. 780 திரு. மூர்த்தி அடையாளம் காட்ட அன்றைய தினமே பிற்பகல் 3.45 மணிக்கு சடலக்கூராய்வை ஆரம்பித்தேன். பிரேதத்தின் கால்களில் மட்டும் மரண விறைப்புத்தன்மை காணப்பட்டது. பிரேதத்தின் மார்பு, வயிற்றுப்பகுதி மற்றும் கைகள் ஆகிய இடங்களில் அழுகிய தன்மையினால் தோல்கள் உறிந்து காணப்பட்டன. பிரேதப் பரிசோதனையின்போது பிரேதத்தில் கீழ்க்கண்ட வெளிப்புற காயங்கள் காணப்பட்டன.

1. மார்பின் இடதுபுறம் நெஞ்சுக்குழிக்கு அருகில் 25 X 5 செ.மீ. அளவில் கருமையான சிராய்ப்பு காயம்

2. மூக்கின் இடதுபகுதியின் மேல்புறம் 1.5 செ.மீ. X 1 செ.மீ. X எலும்பு ஆழம் அளவில் காணப்பட்ட கிழிந்த காயத்தின் அடிப்பகுதியில் உள்ள எலும்புகள் நொருங்கி, அதனைச் சுற்றியுள்ள தசைகள் கன்றிய நிலையில் காணப்பட்டன.

3. இடதுபக்க கன்னம் அமுங்கி மாறுபட்ட தோற்றத்துடன் காணப்பட்டது. இடதுபக்க கன்னத்தை அறுத்து கூராய்வு செய்து பார்த்ததில், கன்னத்தின் எலும்புகள் நொருங்கி அதைச் சுற்றியுள்ள சதைபகுதிகள் கன்றிய நிலையில் காணப்பட்டன.

4. இடதுபக்க கன்னத்தின் கீழ்பகுதியில் 5 X 2 செ.மீ. X எலும்பு ஆழத்திற்கு ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அதன் அடிப்பகுதியில் தாடை எலும்பு நொருங்கி, சுற்றியுள்ள சதைப்பகுதிகள் கன்றிய நிலையில் காணப்பட்டன.

5. மூக்கு அமுங்கியும் மாறுபட்ட தோற்றத்துடனும் காணப்பட்டது. மூக்கை அறுத்து ஆய்வு செய்தபோது மூக்கின் அடிப்பகுதியில் உள்ள எலும்புகள் நொருங்கி அதைச் சுற்றியுள்ள சதைப்பகுதிகள் கன்றிய நிலையில் காணப்பட்டன.

6. இடுப்பின் இடதுபக்க முன்பகுதியில் ஒரு துளை வடிவிலான 6 செ.மீ. X 3 செ.மீ. X உட்புற ஆழம் அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அதன் அடிப்பகுதியில் உள்ள தசை மற்றும் எலும்புகள் வெளியில் தெரியும் அளவிற்கு இருந்தது. அதனைச் சுற்றியுள்ள வயிற்றின் இடதுபகுதி, இடதுபக்க தொடை மற்றும் இடுப்பின் முன்பகுதியில் 30 X 25 செ.மீ. பரப்பளவில் சீரான குழல் உடைய துப்பாக்கியில் இருந்து வெளியேறிய சிறு சிறு குண்டுகள் ஏற்படுத்திய காயங்கள் காணப்பட்டன.

7. இடது உள்ளங்கையில் 12 X 4 செ.மீ. X தசை ஆழம் அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. அதனடிப்பகுதியில் தசை மற்றும் தசைநார்ப்பகுதியில் கருமையான படிவம் காணப்பட்டு, அதனைச்சுற்றிலும் இரத்தம் வெளியேறி இருந்தது.

8. நெற்றியின் நடுப்பகுதியின் மேல்புறத்தில் 5 X 1 செ.மீ. X எலும்பு ஆழம் அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது.

9. தலையின் மத்தியப் பகுதியின் பின்புறத்தில் 15 X 1.5 செ.மீ. X எலும்பு ஆழம் அளவில் கிழிந்த காயம் காணப்பட்டது.

**<u>உட்புறக்கூராய்வு</u>**

தலைப்பகுதியை கூராய்வு செய்து பார்த்ததில் வெளிப்புற தோலில் கிழிந்த இடங்களில் இரத்தம் வெளியேறி இருந்தது. கபாலம் இயல்பான நிலையில் காணப்பட்டது. மூளையின் சவ்விற்கு உட்புறம் மத்திய மற்றும் பின்பகுதியில் இரத்தம் வெளியேறி காணப்பட்டது. கபாலத்தின் அடிப்பகுதியின் மத்தியப்பகுதி நொருங்கி காணப்பட்டது. கழுத்தை கூராய்வு செய்து பார்த்ததில் கழுத்தின் உள்ளுறுப்புகள் மற்றும் குரல்வளை இயல்பான அளவில் காணப்பட்டது. மார்பு பகுதியை கூராய்வு செய்து பார்த்ததில் மார்பு கூட்டு எலும்புகள் இயல்பான அளவில் காணப்பட்டன. இருதயம் இயல்பான அளவில் காணப்பட்டது. அதன் அறைகள் காலியாக இருந்தன. இரண்டு நுரையீரல்களையும் கூராய்வு செய்து பார்த்தபொழுது இரத்தம் செறிந்து காணப்பட்டது. வயிற்றை கூராய்வு செய்து பார்த்ததில் இரைப்பையில் சுமார் 300 கிராம் பாதி செரிமானமான உணவுப் பொருட்கள் எந்தவித வாடையும் இன்றி காணப்பட்டது. கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் ஆகியவை இரத்தம் செரிந்து காணப்பட்டன. சிறுநீர்ப்பை காலியாக இருந்தது. இடுப்பு எலும்பு, முதுகு தண்டுவடம் ஆகியவை இயல்பான நிலையில் காணப்பட்டன. உடல் உள்ளுறுப்புகளை சேகரித்து பதப்படுத்தி இரசாயன பரிசோதனைக்கு அனுப்பிவைத்தேன். இடுப்பு பகுதியில் குண்டுகளால் துளைக்கப்பட்ட தோல்பகுதி, மற்றும் சிறு சிறு குண்டுகள் ஆகியவற்றை சேகரித்து சென்னையில் உள்ள வெடிபொருள் ஆய்வகத்திற்கு அனுப்பி வைத்தேன். நான் பிரேத பரிசோதனை செய்த நேரத்தில் இருந்து 24 மணி நேரத்தில் இருந்து 36 மணி நேரத்திற்கு உட்பட்ட காலத்திற்குள் இறப்பு நேர்ந்திருக்கலாம் என்று கருத்துக்கூறி நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.–6**. சென்னை தடய அறிவியல் ஆய்வக Ballistics Division துணை இயக்குநர் வழங்கிய அறிக்கைகள் – **அ.சா.ஆ.–7 மற்றும் 8**. குருதியியல் அறிக்கை **அ.சா.ஆ.–9**.

( அரசு தரப்பு வழக்குரைஞர் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக ஒத்திவைக்கப்படுகிறது )

Sd/– Dr.Tr.Gokularamanan

Sd/– Tr.S.Jeganathan,

III ADJ (FAC) Salem.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.**
**அமர்வு வழக்கு எண். 301/2017**

**அ. சா– 11**

| | |
|---|---|
| பெயர்: திரு. மூர்த்தி | கிராமம் : |
| த/பெ : திரு. குப்புசாமி | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 24th day of November–2022.

**முதல் விசாரணை**:–

நான் தற்போது மல்லூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 22.08.2016ம் தேதி நான் ஏற்காடு தலைமை காவலராக பணிபுரிந்தபோது, ஆய்வாளரிடம் இருந்து வேண்டுகோள் கடிதத்தைப் பெற்று இந்த வழக்கில் இறந்துபோன குப்புசாமி என்பவரின் பிரேதத்தை சேலம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஒப்படைத்து, மருத்துவரிடம் வேண்டுகோள் கடிதத்தை கொடுத்து பிரேதத்தை அடையாளம் காட்டினேன். 23.08.2016ம் தேதி பிரேத பரிசோதனை நடந்தது. நான் உடன் இருந்தேன். பிரேதத்தின் மீது இருந்து நீல நிற ஜட்டியை மருத்துவர் எடுத்து என்னிடம் ஒப்படைத்தார். நான் அதை ஒரு தனி அறிக்கை மூலம் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். **அந்த ஜட்டி –சா.பொ.–14**. பின்பு உடல் உள்ளுறுப்புகளை பெற்று சேலம் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில்

ஒப்படைத்தேன். துப்பாக்கி மற்றும் துப்பாக்கியின் உடைந்த பாகங்கள் மற்றும் குண்டு காயம்பட்ட இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட தோல் ஆகியவற்றை சென்னை தடய அறிவியல் ஆய்வகம் வெடிகுண்டு பரிசோதனை பிரிவில் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை( 2 வது எதிரி தரப்பில்):- இல்லை.**

**1 வது எதிரி மட்டும் ஆஜர், வழக்குரைஞர் ஆஜரில் இல்லை குறுக்குவிசாரணை இல்லை.**

மறுமுதல்விசாரணை இல்லை.

Sd/- Tr. Moorthy

Sd/- S.Jeganathan,

III ADJ(FAC) Salem.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXII Code of Criminal Procedure)
## IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE (FAC), SALEM.
## அமர்வு வழக்கு எண். 301/2017

**அ. சா– 12**

| | |
|---|---|
| பெயர்: திரு. ஹரிஹரன் | கிராமம் : |
| த/பெ : திரு. செங்கோட்டையன் | தொழில்: |
| வயது: | மதம்: |
| | ஜாதி: |

திரு. S. ஜெகநாதன், B.A, B.L., D.C.A.C.J., முதலாவது கூடுதல் நீதிபதி (முழு கூடுதல் பொறுப்பு) அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 24th day of November–2022.

**முதல் விசாரணை**:–

நான் தற்போது சேலம் மாவட்டம், தனிப்பிரிவில் சார்பாய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 22.08.2016 ம் தேதி நான் ஏற்காடு காவல் நிலையத்தில் சார்பாய்வாளராக பணிபுரிந்தபொழுது அன்றையதினம் பிற்பகல் 3.30 மணியளவில் அ.சா.–1 மாது நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று, நிலைய கு.எண். 130/2016 இதச பிரிவு 302 மற்றும் 1959 ம் வருடத்திய இந்திய படைக்கல சட்டம் பிரிவு 25 (1B) (a) ன் கீழ் ஒரு முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். அந்த அச்சு முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.–10**. பின்பு புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை சேலம் நீதித்துறை நடுவர் எண். 5 நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். பின்பு வழக்கு கோப்பை புலன்விசாரணைக்காக ஆய்வாளர் திரு.குமரன் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை 24.09.2016 ம் தேதி விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை – எதிரிகள் தரப்பில்** ––இல்லை.

மறுமுதல் விசாரணை இல்லை.

Sd/– Tr.Hariharan                    Sd/– S.Jeganathan, III ADJ (FAC)Salem.